# கருஞ்சட்டைத் தமிழர்

ஆசிரியர்: சுப.வீரபாண்டியன்

வார இணையஇதழ் (சனிக்கிழமைதோறும்) • திருவள்ளுவர் ஆண்டு 2051 • பிப்ரவரி 8, 2020 Weekly E-paper • February 8, 2020




## 2020–2021 மோடி அரசின் மோசடி பட்ஜெட்

• வெற்றிச்செல்வன்

### பெரியார் அம்பேத்கர் படிப்பு வட்டம்

அமெரிக்கா மாணாக்கர்

### ஆணவத்தின் உச்சம்!

தலையங்கம்

நூல் அறிமுகம்

### திராவிட இயக்கமும் சமூக நீதியும்

இக்லாஸ் உசேன்

கருஞ்சட்டைத் தமிழர்

ஆசிரியர்: சுப.வீரபாண்டியன்

வார இணையஇதழ் (சனிக்கிழமைதோறும்) • திருவள்ளுவர் ஆண்டு 2051 • பிப்ரவரி 8, 2020 Weekly E-paper • February 8, 2020

# 2020-2021
# மோடி அரசின் மோசடி பட்ஜெட்

• வெற்றிச்செல்வன்

உணவுப் பொருட்களின் விலை கடுமையாக அதிகரித்துள்ளது. கடந்த 50 ஆண்டுகளில் காணப்படாத வேலைவாய்ப்பின்மையை நாடு சந்தித்துக் கொண்டிருக்கிறது. எனினும் அதை எதிர்கொள்வதற்கான செயல்திட்டங்கள் எதுவும் பட்ஜெட்டில் இல்லை.

கிராமப் புறங்களில் நுகர்வை அதிகரிக்க, நோபல் பரிசு பெற்ற அபிஜித் பானர்ஜி போன்ற பொருளாதார வல்லுநர்கள் நூறு நாள் வேலைவாய்ப்புத் திட்டத்திற்கு அதிக ஒதுக்கீடு செய்யக் கோரிக்கை வைத்தும், அவர்களது கோரிக்கை புறக்கணிக்கப்பட்டுள்ளது. ஊரகப் பகுதிகளில் 100 நாள்கள் வேலைவாய்ப்பு வழங்கும் மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலைவாய்ப்புத் திட்டத்திற்குப் போதுமான நிதி பட்ஜெட்டில் ஒதுக்கப்படவில்லை.

கிராமப்புற உள்ளாட்சி அமைப்புகளுக்காக (Panchayat Raj) 2019-20 பட்ஜெட்டில் ஒதுக்கப்பட்ட தொகையான 871 கோடி, இந்த பட்ஜெட்டில் வெறும் 900 கோடியாக மட்டுமே உயர்த்தப்பட்டுள்ளது. இதில் கவனிக்க வேண்டியது என்னவென்றால், சென்ற ஆண்டு அந்த 871 கோடியிலும் வெறும் 500 கோடி மட்டுமே அரசால் செலவழிக்கப்பட்டுள்ளது.

2022-ல் விவசாயிகளின் வருமானம் இரண்டு மடங்காக அதிகரிக்கப்படும் என்பது வெறும் அறிவிப்பாக மட்டுமே உள்ளது. ஏனென்றால், சென்ற பட்ஜெட்டை விட வெறும் 2.9 விழுக்காடு மட்டுமே வேளாண்மைக்குக் கூடுதலாக நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

கடந்த பொதுத்தேர்தலுக்கு முந்தைய இடைக்கால பட்ஜெட்டில், பிரதம மந்திரி கிசான் திட்டத்தின் மூலம் சிறு, குறு விவசாயிகளுக்கு ஓர் ஆண்டுக்கு மூன்று தவணைகளில் ரூ.6000 வழங்கப்படும் என்று அறிவிக்கப்பட்டது. எனினும் கடந்த ஆண்டில் வெறும் 25% விவசாயிகள் மட்டுமே மூன்று தவணைகளிலும் பணம் பெற்றனர் என்று அண்மையில் வெளிவந்த ஆய்வு முடிவுகள் தெரிவிக்கின்றன (down to earth, பிப்ரவரி 2020). எல்லாவற்றிற்கும் மேலாக, உரங்களின் மீதான மானியத்தைக் குறைத்து விவசாயிகளின் வயிற்றில் அடித்துள்ளது மோடி அரசு.

கார்ப்பரேட்டுகளுக்கு ஒன்றரை லட்சம் கோடி வரிவிலக்கைக் கொடுத்துள்ள அரசு, உணவு மானியத்திற்கான நிதியைப் பட்ஜெட்டிலிருந்து ஒதுக்காமல் தேசிய சிறுசேமிப்பு நிறுவனத்திடமிருந்து கடனாக வாங்கப்படும் என்று பட்ஜெட்டில் அறிவித்துள்ளது.

இந்தியாவில் ஊட்டச்சத்துக் குறைபாட்டுடன் இருக்கும் குழந்தைகள் விழுக்காடு அதிகரித்து வரும் நிலையில்,



குழந்தைகளுக்கு ஊட்டச்சத்து வழங்குவதை உறுதிசெய்யும் ஒருங்கிணைந்த குழந்தைகள் மேம்பாட்டுத் திட்டத்திற்கு (ICDS) நிதி ஒதுக்கீட்டைக் குறைத்திருப்பது சாமானியர்களின் மீதான அரசின் இரக்கமற்ற தன்மையையே காட்டுகிறது.

இந்திய மருத்துவர்களுக்கு வெளிநாடுகளில் தேவை அதிகரித்துள்ளதாகவும், அதனை மருத்துவர்கள் பயன்படுத்திக் கொள்ளும் வகையில் அவர்களின் திறன்கள் மேம்படுத்தப்படும் என்றும் நிதியமைச்சர் தமது பட்ஜெட் உரையில் குறிப்பிட்டிருக்கிறார். ஏற்கெனவே இந்தியாவில் மருத்துவர்களுக்கான பற்றாக்குறை இருக்கும் நிலையில் அவர்கள் இந்தியாவிலேயே தொடர்ந்து பணிபுரிவதற்கான சூழலை மேம்படுத்துவது குறித்து ஆராயாமல், அமைச்சர் இவ்வாறு பேசியுள்ளது அறியாமையின் உச்சகட்டமாகும்.

கல்விக்கான நிதி ஒதுக்கீடு அதிகரிக்கப்பட்டுள்ள நிலையில், புதிய கல்விக் கொள்கை விரைவில் அமல்படுத்தப்படும் என்று அறிவிக்கப்பட்டிருப்பது, அது யாருக்கான கல்வியாக அமையும் என்ற கேள்வியை எழுப்பியுள்ளது.

2005-ஆம் ஆண்டு 36.7% ஆக இருந்த உழைக்கும் பெண்களின் விழுக்காடு, 2018-இல் 26% ஆகக் குறைந்துள்ள நிலையில், பெண்களின் வேலைவாய்ப்பினைப் பெருக்குவதற்கான அறிவிப்புகள் எதுவும் பட்ஜெட்டில் இல்லை.

இவை மட்டுமல்லாது, மாநிலங்களின் உரிமையைக் கேள்விக்குள்ளாக்கும் வகையில், மாநிலங்களுக்கான நிதி ஒதுக்கீட்டில் கை வைத்துள்ளது ஒன்றிய அரசு. மாநிலங்களின் சுயாட்சி உரிமையை மதிக்காத பாஜகவின் போக்கு கண்டிக்கத்தக்கது. இது மிகவும் மோசமான விளைவுகளையே ஏற்படுத்தும்.

இலாபத்தில் இயங்கும் ஆயுள் காப்பீட்டு நிறுவனத்தின் பங்குகளை விற்றுவிட்டு, சாமானியர்களின் வாழ்வைச் சிதைத்துக் கொண்டிருக்கும் பாஜக அரசை எதிர்த்து மக்கள் வீதியில் இறங்கும் நாள் வெகு தொலைவில் இல்லை.

•

# பெரியார் அம்பேத்கர் படிப்பு வட்டம்

● அமெரிக்கா மாணாக்கர்

பெரியார் அம்பேத்கர் படிப்பு வட்டம் (அமெரிக்கா) அமைப்பு, அமெரிக்க மண்ணில் ஆதிக்கத்திற்கு எதிராகப் பேசுவதற்கும் குரல் கொடுப்பதற்கும் ஓர் அமைப்பு வேண்டுமென்ற நோக்கத்தில் தொடங்கப்பட்டதாகும்.

அமெரிக்கத் தமிழ் விழா நிகழ்ச்சி ஒன்றில், எழுத்தாளர் பெருமாள்முருகனை அழைக்கக் கூடாது என்று, குறிப்பிட்ட சாதியினர் போர்க்கொடி தூக்க, அதற்கு அடிபணிந்து அவர் அழைக்கப்படவில்லை. இந்த நிகழ்வு பல ஒத்த கருத்துடையோர் இடையில் பெரும் சலசலப்பை ஏற்படுத்தியது.


சலசலப்பை நீர்த்துப் போகச் செய்யாமல் பெரும் ஒலியாக எழுப்ப வேண்டிய தேவை ஏற்பட்டது. அந்த ஒலி சாதிய மனப்பான்மையைக் கடல் தாண்டிக் கொண்டு வந்திருக்கும் சிலருக்கு அறிவொளியை ஏற்படுத்துவதாக இருக்க வேண்டும் என்ற காரணத்திற்காக 2017, ஏப்ரல் 14 அண்ணல் அம்பேத்கர் பிறந்த நாளில் தொடங்கப்பட்டதுதான் பெரியார் அம்பேத்கர் படிப்பு வட்டம் . தொடங்கிய நாளில் இருந்து பல்வழி அழைப்பின் மூலம் மாதம் ஒரு முறை தமிழ்நாட்டில் இருந்து திராவிடர் இயக்கக் கருத்துரையாளர்கள், தலித் இயக்கக் கருத்துரையாளர்கள், பெண்ணியக் கருத்துரையாளர்களைக் கொண்டு கருத்துகள் பரிமாறப்பட்டு, கேள்வி பதில்களோடு உரையாடி இங்கிருக்கும் தோழர்களுக்குச் சமூக நீதிக் கருத்துக்களைக் கொண்டு செல்வதில் ஓர் அடித்தளமிட்டிருக்கிறது இந்தப் படிப்பு வட்டம்.

திராவிடர் விடுதலைக் கழகத் தலைவர் கொளத்தூர் மணி, முதல் பல்வழி அழைப்பைத் தொடங்கி வைத்துக் கருத்துரையாற்றினார். தொடர்ந்து தோழர் ஓவியா, திராவிடர் கழகத் தலைவர் ஆசிரியர். கி. வீரமணி, திராவிட இயக்கத் தமிழர் பேரவைப் பொதுச் செயலாளர் சுப. வீரபாண்டியன், விடுதலைச் சிறுத்தைகள் கட்சியின் தலைவர் எழுச்சித் தமிழர் தொல். திருமாவளவன் , எழுத்தாளர் ராஜாத்தி சல்மா, ஆதித்தமிழர் பேரவையின் தோழர் அதியமான், மனநல மருத்துவர் ஷாலினி, வழக்கறிஞர் அருள்மொழி, மருத்துவர் எழிலன், நாகநாதன் எனப் பலர் தங்கள் கருத்துகளைப் பகிர்ந்து கொண்டிருக்கின்றனர்; அறிவூட்டியிருக்கின்றனர் .

தமிழ்நாட்டில் இருந்து கருத்துரையாளர்களை அழைப்பதோடு, வடஅமெரிக்கத் தோழர்களும் பேசுவதற்கு ஒரு தளத்தை ஏற்படுத்த வேண்டும் என்ற காரணத்திற்காகப் 'புத்தகம் பேசலாம்' என்ற ஒரு நிகழ்ச்சியை, பெரியார் அம்பேத்கர் படிப்பு வட்டம் மாதம் ஒரு முறை நடத்தி வருகின்றது. இந்த நிகழ்வில், தாங்கள் படித்த நூல்களைப் பற்றித் தோழர்கள் தங்கள் கருத்துகளைப் படிப்பு வட்டத் தோழர்களோடு பகிர்ந்து கொள்கின்றனர்.

அதே போல கடந்த இரண்டு ஆண்டுகளுக்கு முன் ஜனவரியில் 'The Common Sense' என்ற மின்னிதழைத் தொடங்கி, தொடர்ந்து நடத்தி வருகிறது படிப்பு வட்டம். அறிவார்ந்த பகுத்தறிவுக் கட்டுரைகள், கவிதைகள், சிறுகதைகள் எனப் பல்வேறு தளங்களில் வடஅமெரிக்கத் தோழர்கள் மின்னிதழில் எழுதி வருகின்றனர்.

இவற்றிற்கெல்லாம் முத்தாய்ப்பாக, 2019 நவம்பர் மாதம் பெரியார் அம்பேத்கர் படிப்பு வட்டத்தின் சார்பாக, 'The





Common Sense ரேடியோ' தொடங்கப்பட்டது. தொடர்ந்து தலைவர்களின் சொற்பொழிவுகள், திரையிசைப் பாடல்களோடு தமிழ்நாட்டின் திராவிடர் இயக்க வரலாறு, கவிதைத் துளிகளோடு திரையிசை, நேயர் விருப்பப் பாடல்களோடு தந்தை பெரியார் பற்றிய கேள்விகளுக்கு பதில்கள் என, பல சேவைகளைத் தொடர்ந்து வழங்கி வருகிறது.

இவை தவிர்த்து, அண்ணல் அம்பேத்கர் பிறந்த நாள், தந்தை பெரியாரின் பிறந்த நாள் ஆகியவை, படிப்பு வட்டத் தோழர்கள் பெருமளவில் இருக்கும் சில மாநிலங்களான நியூ ஜெர்சி, பாஸ்டன், மிச்சிகன், கனெக்டிகட் போன்ற இடங்களில் மாணவர்களுக்கான பேச்சுப் போட்டி, ஓவியப் போட்டியோடு கொண்டாடப்படுகின்றன. அடுத்த தலைமுறையினருக்கும் தந்தை பெரியாரை அறிமுகப்படுத்தும் ஒரு வாய்ப்பாகவே இந்த விழாக்களைக் கொண்டாடுகின்றது படிப்பு வட்டம். 2019 ஆம் ஆண்டு தந்தை பெரியாரின் பிறந்த நாளை பாஸ்டனில் திராவிடர் கழகத் தலைவர் ஆசிரியர் கி. வீரமணி தலைமையில் வெகு சிறப்பாகப் பட்டிமன்றத்தோடு கொண்டாடி மகிழ்ந்தது படிப்பு வட்டம் என்பது குறிப்பிடத்தக்கது.

பெரியார் பன்னாட்டு அமைப்பின் சார்பாக நடந்த மனிதநேய மாநாட்டில் படிப்பு வட்டத் தோழர்கள் கலந்து கொண்டு குழு விவாதம் நடத்தி, சாதியை அமெரிக்கச் சட்டத்தில் தண்டனைக்குரிய குற்றமாகச் சேர்க்க வேண்டும் என்று தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

படிப்பு வட்டத்தின் சார்பாக விடுதலைச் சிறுத்தைகள் கட்சியின் துணைப்பொதுச்செயலாளர் ஆளூர் ஷாநவாஸுக்கு "செயல் விருது" வழங்கிச் சிறப்பிக்கப்பட்டது. அதே போல தந்தை பெரியாரின் 141 ஆவது பிறந்த நாளில் பாஸ்டன் நகரில் திராவிடர் கழகத்தின் தலைவர் ஆசிரியர் கி. வீரமணிக்கு "Stalwart Of Dravidian Ideology" என்ற விருதையும், ஆசிரியரின் இணையர், பல சோதனையான களங்களில் ஆசிரியருக்கு உறுதுணையாக இருக்கின்ற மோகனா அவர்களுக்கு "சுயமரியாதை இயக்க வீராங்கனை" என்ற விருதையும் வழங்கிப் படிப்பு வட்டம் பெருமை அடைந்தது.

அமெரிக்கப் பெரியார் அம்பேத்கர் படிப்பு வட்டம் பகுத்தறிவுப் பாதையில் தொடர்ந்து பயணிக்கும்! ●

ஆசிரியர்
**சுப.வீரபாண்டியன்**

பொறுப்பாசிரியர்
**எழில். இளங்கோவன்**

ஆசிரியர் குழு
**உதயகுமார்**
**வெற்றிச்செல்வன்**
**ஸ்ரீவித்யா**

**வெளியீடு:**
**திராவிட இயக்கத் தமிழர் பேரவை**

இணையதளம்
**www.keetru.com**
**www.karunchattaibooks.com**

மின் அஞ்சல்
**karunchattai@gmail.com**

டுவிட்டர்
**suba_vee**

தொடர்புக்கு
120 என்.டி. ராமராவ் தெரு
ரங்கராஜபுரம், கோடம்பாக்கம்
சென்னை - 600 024

தொலைபேசி: 044-2472 6408

## நூற்றாண்டு விழா கருத்தரங்கம்



அருந்ததியர் இயக்கங்களின் நூற்றாண்டு விழா கருத்தரங்கம் சென்னை பெரியார் திடலில் 02-02-2020 ஞாயிறு அன்று நடைபெற்றது. ராவ்சாகிப் எல்.சி.குருசாமி கல்வி மையத்தின் ஏற்பாட்டில் நடைபெற்ற இந்த கருத்தரங்கில் தோழர் காமாட்சி தலைமை ஏற்க எழில்.இளங்கோவன், வெண்மணி, முகிலரசன், திலீபன், பா.இளங்கோவன், தலித் சுப்ரமணி ஆகியோர் உரையாற்றினர். இறுதியில் நிறைவுரையாகத் தோழர் சுப.வீரபாண்டியன் அவர்கள் சிறப்புரை ஆற்றினார்.

## குடியுரிமைச் சட்டத்திற்கு எதிராக



காஞ்சி மாவட்டம், சிட்லபாக்கத்தில் தேசியச் குடியுரிமைத் திருத்தச் சட்டத்துக்கு எதிராக, மாவட்டத் திராவிட முன்னேற்ற கழகம் ஏற்பாடு செய்திருந்த கையெழுத்து இயக்கத் தொடக்க நாளின் கூட்டத்தில் திராவிட இயக்கத்தமிழர் பேரவையின் மாவட்டச் செயலாளர் இளமாறன் உரையாற்றினார்.

## தெருமுனைக் கூட்டம்



காஞ்சி மாவட்டம், காமராஜபுரத்தில் 31-01-2020 அன்று இன்றைய அரசியல் நிலை குறித்து நடைபெற்ற தெருமுனைப் பிரச்சாரக் கூட்டத்தில் பேரவைத் துணைபொதுச்செயளாலர் சிங்கராயர், விடுதலை சிறுத்தைகள் கட்சியின் துணைப் பொதுச்செயளாலர் வன்னியரசு, தோழர்கள் அன்பு, இளம்வழுதி, தமிழ்மறவன், இளங்கோ ஆகியோர் உரையாற்றினர்.

தமிழராய் வேர் பிடி! உலகெலாம் கிளை விரி!

# கருஞ்சட்டைத் தமிழர்

## ஆணவத்தின் உச்சம்!

*அண்மையில் தமிழ்நாடு வனத்துறை அமைச்சர் திண்டுக்கல் சீனிவாசன், நீலகிரி மாவட்ட யானைகள் புத்துணர்வு முகாமைத் தொடங்கி வைக்கச் சென்றார். அவருடன் மாவட்ட ஆட்சித்தலைவர் மற்றும் அதிகாரிகள் உடன் சென்றனர்.*

*அப்படிச் செல்லும்போது, வழியில் இருந்த ஒரு சிறுகோயிலை வணங்குவதற்காக நின்றது அமைச்சர் குழாம். அப்பொழுது அவர் செருப்பு கழற்ற வேண்டிய நிலை ஏற்பட்டது.*

*உடனே அங்கு வாழ்ந்த, மண்ணுக்குரிய மக்களைச் சேர்ந்த ஓர் இளம் சிறுவனை அதிகாரத்தோடு அழைத்து தன் காலின் செருப்பைக் கழற்றச் சொல்லியிருக்கிறார்.*

*சொல்லியவர் அமைச்சர், உடன் இருப்பவர்கள் ஆட்சித் தலைவர், அதிகாரிகள். என்ன செய்வான் அந்தச் சிறுவன்?*

*இயல்பாகவே பயந்த குணம் கொண்ட சமூகத்தைச் சேர்ந்த மக்களின் குழந்தையான அந்தச் சிறுவன், அமைச்சரின் கால் செருப்பைக் குனிந்து கழற்றி இருக்கிறான்.*

*அப்பொழுது உடன் இருந்த ஆட்சித் தலைவர் அதிகாரிகள் உட்பட அனைவரும் பார்த்துக் கொண்டுதான் இருந்தார்களே ஒழிய, அதை ஒரு சாதி வன்மம் என்ற கோணத்தில் யாரும் தடுக்க முன்வரவில்லை.*

*இந்தச் செய்தி தொலைக்காட்சிகளிலும், சமூக ஊடகங்களிலும் வேகமாகப் பரவத்தொடங்கிக் கண்டனங்கள் வலுவாக எழத்தொடங்கின.*

*உடனே அமைச்சர் சீனிவாசன் இதற்கு ஒரு அற்புதமான விளக்கம் தந்தார்.*

*அதாவது அருகில் நிற்பவர்கள் எல்லாம் கட்சிக்காரர்கள், பெரியவர்கள், அதிகாரிகள். அதனால் அந்தச் சிறுவனை அழைத்து என் காலின் 'பூட்ஸை' கழற்றச் சொன்னேன் என்று.*

*அருகில் நிற்பவர்கள் கட்சிக்காரர்கள், பெரியவர்கள், அதிகாரிகள் என்பதனால் அவர்களுக்கான மரியாதை கொடுத்தார் என்பது சரி.*

*ஆனால், 'மலைச்சாதி'யைச் சேர்ந்த அந்தச் சிறுவனுக்குரிய மரியாதை கூட வேண்டாம், குறைந்த பட்சம் அவனிடம் அன்பையாவது காட்டியிருக்க வேண்டாமா?*

*தொடர்ந்து அமைச்சர் சொல்லும்போது, அந்தச் சிறுவனை தன் பேரனைப்போலப் பார்த்ததாக வேறு சொல்கிறார். அப்படியானால் பேரப்பிள்ளைகளை எல்லாம் அவர் செருப்பு கழற்றச் சொல்லுவாரா? அவர் வீட்டுப் பிள்ளைகளுக்கும் இதே நிலைதானா?*

*இங்கு சாதியம் கண்முன்னே வருகிறது. அய்யர், அய்யங்கார் வீட்டுச் சிறுவர்களையும் நாம் மதிக்க வேண்டும். அதை விட்டு விட்டு அவர்களை தன் பேரன் என்று, தன் செருப்பை கழற்றச் சொல்வாரா அமைச்சர் சீனிவாசான்.*

*அமைச்சரின் இந்தச் செயல் சாதியம், ஆதிக்கத்தின் உச்சம்.*

*அனைவரும் சமம் என்ற இந்திய அரசியல் சாசனத்திற்கு முரணாக நடந்து கொண்ட அமைச்சர் சீனிவாசன் மீது வன்கொடுமைத் தடுப்புச் சட்டத்தின்கீழ் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று மக்கள் எழுப்பும் குரல் எழுப்பினர். அதற்கு அஞ்சி அமைச்சர் இப்போது வருத்தம் தெரிவித்துள்ளார்.*

நூல் அறிமுகம்

# திராவிட இயக்கமும் சமூக நீதியும்

● இக்லாஸ் உசேன்

தோழர் உமா தொகுத்துள்ள “திராவிட இயக்கமும் சமூக நீதியும்” என்ற நூல் புகழ்பெற்ற எழுத்தாளர்களின் தேர்ந்தெடுக்கப்பட்ட கட்டுரைகளாகவும் கருத்துக் குவியலாகவும் இருக்கிறது.




திராவிட இயக்க ஆய்வாளர் க.திருநாவுக்கரசின் ‘திராவிட இயக்கமும் தமிழ்த்தேசிய உணர்ச்சியும்’ என்கிற கட்டுரையில் திராவிடம் என்றால் என்ன என்பதில் தொடங்கி, திராவிட இனத்தின் வரலாறும், திராவிட நிலத்தின் வரலாறும், திராவிட மொழியின் மூத்த மொழியான தமிழின் வரலாறும் ஆய்வுரீதியான ஆதாரங்களோடு அடுக்குகளாகத் தொகுக்கப்பட்டுள்ளன.

திராவிடத்திற்கு ஐரோப்பிய அறிஞர்கள் கொடுத்த ஆதாரத்தையும் குறிப்பாக இராபர்ட் கால்டுவெலின் ஒப்பிலக்கணம் என்கிற திராவிட மொழிக் குடும்பம் பற்றிய தகவல், நீதிக்கட்சி ஆட்சியில் தொடங்கி, திமுகவின் கலைஞர் ஆட்சி வரை திராவிடமும் தமிழும் எப்படிப் பயணித்தன என்பதை இந்த 22பக்க கட்டுரை நமக்கு ஏராளமான தரவுகளோடு தருகிறது.

திராவிடர் கழகத் துணைத் தலைவர் கவிஞர் கலி. பூங்குன்றனின் ‘திராவிட இயக்கமும் வகுப்புவாரி உரிமையும்’ என்கிற கட்டுரை பார்ப்பனர் அல்லாதோர்களின் கல்வி உரிமைப் போரட்டத்தையும், பார்ப்பன ஆட்சியாளார்களின் சூழ்ச்சி முறையையும் விவரிக்கிறது.

1870இல் தொடங்கி நீதிக்கட்சி ஆட்சிக்கு வரும்வரை பார்ப்பனர் அல்லாதார் ஒற்றை விழுக்காடு மட்டுமே கல்வி கற்றவர்களாகச் சூழல் இருந்தும், ஆட்சிப் பணி, நீதித்துறை, கல்வித்துறை என்று அனைத்தையும் மூன்று புள்ளி ஒரு சதவீதம் மட்டுமே உள்ள பார்ப்பனர்கள் எப்படி ஆதிக்கம் செலுத்தினார்கள் என்ற புள்ளி விவரத்தோடு, நீதிக்கட்சி ஆட்சி மாணவர்களின் கல்விக்கு உதவியதோடு கல்வி நிலையங்களில் விதிதாச்சார முறையில் வேலை ஒதுக்கீடு முறை அமலுக்கு வந்ததையும், இராஜாஜியின் ஆட்சியில் கல்விக்கூடங்களை மூடியதும். ஓமந்தூரார் ராமசாமி ஆட்சியில் வகுப்புவாரி வேலை வாய்ப்பும், அதைக் கடுமையாகப் பார்ப்பனர்கள் எதிர்த்ததோடு ஓமந்தூராரைத் தாடி வைக்காத பெரியார் என வசைபாடியது (புகழ்ந்தது), புதிய அரசியல் சட்டத்தை வைத்து வகுப்புவாரிப் பிரதிநிதித்துவத்தைப் பார்ப்பனர்கள் சூழ்ச்சியால் எதிர்கொண்டார்கள் என்கிற நீதிமன்ற விசாரணை முழுமையும், ஏராளமான தகவல்களும் 2006/11இல் கலைஞர் ஆட்சியில் நுழைவுத் தேர்வு ரத்தால் 85விழுக்காட்டுக்கு மேல் பார்ப்பனர் அல்லாதோர் மருத்துவப் படிப்பில் படித்தது என கலி.பூங்குன்றனின் கட்டுரை சமூகநீதிக் கல்வி ஆவணம்போல் இருக்கிறது.

திமுகவின் கொள்கைப் பரப்புச் செயலாளர் ஆ.இராசாவின் ‘திராவிட இயக்கமும் தாழ்த்தப்பட்டோரும்’ என்கிற கட்டுரை, காலம் காலமாக ஒடுக்கப்பட்ட மக்களாக இருந்தவர்களுக்கு நீதிக்கட்சி ஆட்சிக்கு வந்தவுடன் ஏற்பட்ட சமூகநீதியை விவரிக்கிறது.

பஞ்சமர்கள் பொதுத் தெருவில் நடந்து போகச் சட்டம், பறையன் என்ற சொல்லின் பயன்பாட்டை நீக்கியது.

தாழ்த்தப்பட்டோருக்கான முதல் அமைச்சகம்.

புரதவண்ணார் சமூகத்தினர் பகலில் நடக்க அனுமதி,

பேருந்துகளில் தாழ்த்தப்பட்டோருக்கு அனுமதி,

கோவில் அறங்காவலர் குழுவில் தாழ்த்தப்பட்டோருக்கு இட ஒதுக்கீடு,

நாடகம் பார்க்க அனுமதி

என நீதிக்கட்சி கொண்டுவந்த ஒடுக்கப்பட்டோர்களுக்கான சட்டங்களும், சைமன் கமிசன், வட்டமேசை மாநாட்டில் அம்பேத்கர் மற்றும் காந்தியின் செயல்பாடுகளும், தெருக்களில் சாதிப்பெயர் ஒழிப்பு, பெயருக்குப் பின்னால் சாதிப்பெயர் ஒழிப்பு என திராவிடக் கருத்தியலின் சமூகநீதிச் சாதனையை விளக்குகிறது ஆ.ராசாவின் கட்டுரை.

தமிழ் நாடு சமூகநீதி மண், இங்கு மதவெறிக்கு இடமில்லை என்பதை நிரூபிக்கும் வகையில் இந்தியா சுதந்திரம் பெற்றபோது பிரிவினையைத் தொடர்ந்து மதக்கலவரம் நிகழ்ந்த போதும், பாபர் மசூதி இடிக்கப்பட்ட போது நாடு முழுக்க மதக்கலவரம் நிகழ்ந்த போதும் தமிழகத்தில் மதநல்லிணக்கம் பேணப்பட்டது.

பேரா.அருணனின் ‘திராவிட இயக்கமும் மதவெறி எதிர்ப்பும்’ கட்டுரை, கடவுள் பற்றிய கற்பிதங்கள், கற்பனைகள் பற்றியும், மதவெறியால் நடந்த படுகொலைகள், வெகுமக்கள் பட்ட துயரம், இந்துமகா சபை, ஆர்.எஸ்.எஸ்-இன் மதவெறிச் செயல்பாடுகள், மதவெறி ஆட்சியைப் பற்றிய கடுமையான விமர்சனம், புராணங்களின் புளுகும், காப்பிங்களின் காவாளித்தனமும் பற்றிய தந்தை பெரியாரின் கருத்து என நிறைந்த ஆதாரங்களோடு இருக்கிறது.

இந்நூலில் இறுதிக் கட்டுரையாக பேரா.மு.ராமசுவாமி எழுதியுள்ள ‘திராவிட இயக்கமும் நாடகத் தமிழும்‘ என்ற கட்டுரை திராவிட இயக்கம் வளர்ந்த வரலாறு, திராவிட இயக்கம் சந்தித்த சோதனைகள், திராவிட இயக்கத்தில் நடத்தப்பட்ட நாடகங்கள், அந்த நாடகங்கள் மூலம் வெகுமக்களுக்குக் கொண்டுபோன சமூக நீதி, அதோடு திராவிடக் கருத்தியல்களான சமூக நீதியில் அறிஞர் அண்ணா மற்றும் கலைஞரின் பங்களிப்பு என நீண்ட கட்டுரையாக பல தகவல்களோடு இக்கட்டுரை முடிகிறது.

கருஞ்சட்டைப் பதிப்பகத்தின் வெளியீடாக வெளிவந்துள்ள “திராவிட இயக்கமும் சமூக நீதியும்” என்ற இந்நூல் ஒவ்வொருவரும் கட்டாயம் படிக்க வேண்டிய ஒன்று. ●

**திராவிட இயக்கமும் சமூக நீதியும்**
ஆசிரியர்: **இரா.உமா**
வெளியீடு: **கருஞ்சட்டைப் பதிப்பகம்**
விலை: **ரூபாய் 80**
தொடர்புக்கு: **9940407468, 044 24726408**

Published By Dravida Iyyakka Tamilar Peravai. . Editor Suba. Veerapandian,